**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.05.2022**

**Case No : CC 91 /2019**

**Deposition of Witness : P.W.1**

| | |
|---|---|
| **Name: ஜெபமணி** | **Caste:** |
| **Father / Husband Name:** கனகராஜ் | **Calling:** |
| **Village: பூச்சிக்காடு** | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 42** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 17.05.2022**

முதல் விசாரணை :

நான் பூச்சிக்காடு கிராமத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எதிரியை தெரியும் அவர் எனது ஊர்க்காரர். நான் இந்திரா மகளிர் குழுவில் உறுப்பினராக உள்ளேன். மகளிர் குழுவின் கூட்டம் மாதந்தோறும் 25 ம் தேதி நடைபெறும். அதன்படி கடந்த 28.4.2019 அன்று மகளிர் குழுவின் கூட்டம் பூச்சிக்காட்டில் உள்ள அந்தோணியார் கோவில் கெபி அருகில் மாலை 5.00 மணி முதல் 6 மணியளவில் நடந்தது. அந்த கூட்டத்தில் குழுத்தலைவி மேரி அவர்களும் இருந்தார்கள். அந்த குழுவில் எதிரியின் அம்மா பாத்திமாவும் இருந்தார்கள். நாங்கள் அனைவரும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அங்கு குடிபோதையில் வந்த எதிரி நான் கைநீட்டி பேசிக் கொண்டிருப்பதை பார்த்து எதிரி என்னிடம் நீ எப்படி என் அம்மாவை பார்த்து கைநீட்டி பேசலாம் என்று தேவடியா மகளே என்று தகாத வார்த்தைகளால் பேசினார். என்

மகள்களையும் அசிங்கமான வார்த்தைகளால் பேசினார். நான் அவரிடம் நீ எப்படி என்னை கெட்ட வார்த்தையால் என்னையும் என் மகளையும் பேசலாம் என்று கேட்டேன். அதற்கு எதிரி நான் அப்படித்தான் பேசுவேன் என்று சொல்லி கையால் முதுகில் அடித்தார். நான் உடனே என் கணவர் கனகராஜ்க்கு போன் மூலம் தகவல் சொன்னேன். என் கணவர் வந்து எதிரியிடம் நீ எப்படி என் மனைவியை அடிக்கலாம் என்று கேட்டார். அதற்கு எதிரி என் கணவரையும் பிடித்து தள்ளிவிட்டு, என்னுடைய வலது கன்னத்தில் அறைந்து அடித்து விட்டார். அதற்கு பின்பு கீழே கிடந்த கட்டையால் என் உச்சி மண்டையில் அடித்து விட்டார். அதில் நான் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டேன். பக்கத்தில் உள்ளவர்கள் தண்ணீர் தெளித்து விட்டார்கள். பின்பு நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். காயம்பட்ட நான் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றேன். எதிரி என்னை அசிங்கமாக பேசியதால் எனக்கு அவமானமாக இருந்தது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை:</u>

என் கணவர் திசையன்விளை அல்லது தட்டார்மடம் எந்த பஜாரில் வாடகைக்கு வண்டியை விடுவார் என்றால் எந்த ஊரிலிருந்து போன் வருமோ அங்கு செல்வது வழக்கம் ஆகும். குழுவில் மொத்தம் எத்தனை நபர்கள் உள்ளார்கள் என்றால் 14 பேர். காவல்துறை விசாரணையில் அன்று குழுவில் உள்ள எத்தனை நபர் கலந்து கொண்டார்கள் என சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரியின் தாயார் குழுவின் உறுப்பினராக உள்ளாரா சம்பவத்தின்போது அவர் கலந்து கொண்டாரா என்று காவல்துறை விசாரணையில் அதுசம்பந்தமாக ஆதாரம் ஏதேனும் கேட்டார்களா என்றால் இல்லை. எதிரியின் தாயார் குழுவில் உறுப்பினர் இல்லை என்றும் அதனால்தான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் காவல்துறை விசாரணையின்போது ஆதாரங்களை காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. பூச்சிக்காட்டிலிருந்து தட்டார்மடத்திற்கு நேரடியான போக்குவரத்து இல்லை என்றால் சரியல்ல. மினிபேருந்து உள்ளது.

எத்தனை மணிக்கு மினிபேருந்து வரும் என்றால் அரைமணி நேரத்திற்கு ஒரு பேருந்து வரும். அரைமணி நேரத்திற்கு ஒரு பேருந்து என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும் கையெழுத்து மட்டும்தான் என்னுடையது என்றால் சரியல்ல நான் சொல்லசொல்லத்தான் காவல்நிலையத்தில் புகாரை எழுதினார்கள். காவல்துறையினர் எழுதினார்கள் அவர்கள் பெயர் தெரியாது. நானும் என் கணவரும் வட்டிக்கு பணம் கொடுத்து வருகிறோம் என்றும் அதனால் நான் அதிகமான வட்டி கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டதால் அவர்கள் புகார் கொடுத்து விடுவார்கள் என்று நான் பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் கணவர் டிரக்கர் வைத்துள்ளதால் அடிக்கடி காவல்நிலையம் சென்று வருவார் என்றும் அதனால் பொய்யான புகாரை தயார் செய்து வழக்கு தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வேறு விதத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்தை கொண்டு எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d) Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.